CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவைக்கு உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பான மா.கொ.நி அறிக்கை

***14 ஒக்டோபர், 2021, கொழும்பு, இலங்கை:*** ஒக்டோபர் 8 ஆம் திகதி, 2021 அன்று பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில், குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையைத் திருத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட சட்டமூலம் குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ("மா.கொ.நி") ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள், சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் நீதவான் அல்லது மேல் நீதிமன்ற நீதிபதி முன் முன்னிலைப்படுத்தப்படும் சில சந்தர்ப்பங்கள் அன்றேல் வழமையாக அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுகின்ற தேவைப்பாட்டைக் கைவிடுவதற்கு நாடுகிறது. ஒரு நிரந்தரத் திருத்தமாக உத்தேசிக்கப்பட்டுள்ள இச்சட்டமூலம், கட்டுக்காவலின் போதான சித்திரவதை மற்றும் துஷ்பிரயோகம் என்பன அநேக சந்தர்ப்பங்களில் ஒரு நெறிமுறையாக வந்துள்ள இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில், இருக்கின்ற பிரச்சினைகளின் பின்னணியில் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கு அரசியலமைப்புரீதியான உத்தரவாதம் இருந்த போதிலும், இந்த அடிப்படை உரிமையைப் பாதுகாப்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசுகளினால் தவறுதல்கள் தொடர்ச்சியாக இருப்பதையே முன்னைய தசாப்த காலங்கள் காண்பிக்கின்றதுடன், அவை ஒரு குற்ற விலக்களிப்புக் கலாச்சாரத்தையும் ஏற்படுத்தின. அத்தகையதொரு பின்னணியில், உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் இருக்கின்ற பிரச்சினைகளை மேலும் மோசமாக்குமென்பதால் மா.கொ.நி கவலையடைகின்றதுடன், அதனால் சட்டமூலத்தை மேற்கொண்டு தொடராதிருப்பதற்கு அரசாங்கத்தை அது வலியுறுத்துகிறது.

துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைக் கலாச்சாரத்திற்கு மேலதிகமாக, தடுத்து வைக்கப்பட்டிருப்போர் தங்களுக்காக சட்டத்தரணிகளை அணுகுவதற்கு அர்த்தமுள்ள வகையிலான சட்டப் பாதுகாப்புகள் உத்தரவாதமளிக்கின்ற போதிலும், அவ்வாறான அணுகுவழிகளைக் உபயோகிப்பதிலிருந்து அவர்கள் திரும்பத் திரும்பத் தடுக்கப்பட்டனர். துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதை அறிக்கைகளால் கட்டமைக்கப்பட்ட அவ்வாறான ஒரு பின்னணியில், சந்தேகநபர்கள் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பாதுகாப்பு மற்றும் நன்னிலை தொடர்பான ஒரு சோதனை நடவடிக்கையாக நீதித்துறை செயற்படுவதற்கு இயலுமாகவிருந்த ஒரு முறையே அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதாகும். அத்தகையதொரு அத்தியாவசியப் பாதுகாப்பு முறையை நிரந்தரமாக இல்லாதொழிப்பது ஏற்றுக் கொள்ள முடியாததுடன் மிகவும் கவலையளிக்கின்றது.

மேலும், சட்டமூலத்தில் ஏற்பாடளிக்கப்பட்டவாறு நேரடிப் பிரசன்னம் இல்லாதொழிக்கப்பட முடியும் தொடர்பான அடிப்படைகள், பரந்துபட்டது மற்றும் தெளிவற்றது என்பதுடன் அதிகாரிகளினால் துஷ்பிரயோகிக்கப்படுதலுக்கும் உள்ளாகப்படக்கூடியதாகும். உதாரணத்திற்கு, 'நீதிமன்ற நடவடிக் கைகளைச் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் தடைசெய்யும் ஓர் ஏதுநிலை அங்குள்ளது' என்பது அவர் முன்னிலைப்படுத்தப்பட முடியாததிற்கான காரணங்களுள் ஒன்றாக உள்ளது. சட்டமூலத்தின்படி, அவ்வாறனதொரு தடை 'ஏற்படும் சாத்தியம்', அல்லது ஒரு தடையை எது கருதுகிறதென்பதை எவ்வாறு சட்டமா அதிபர், சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி அல்லது சிறைச்சாலைகள் அத்தியட்சகர் தீர்மானிப்பர் என்பது தெளிவற்றதாக உள்ளது.

இறுதியாக, கூடுதல் முக்கியத்துவத்தைத் தேவைப்படுத்தும் விடயங்களிற்கு மேலாக தற்போதைய சட்டமூலம் ஏன் முன்னுரிமையைப் பெற்றது என்பதற்கான தகவல்கள் பகிரங்கமாக இல்லாத நிலையுடன் இலங்கையின் குற்றவியல் நீதிமுறைமை அதிகளவான சவால்களுக்கு முகங்கொடுக்கும் ஒரு பின்னணியில், இந்தச் சட்டமூலத்தின் தேவை மற்றும் அது சமர்ப்பிக்கப்பட்ட நேரம் தொடர்பாகவும் மா.கொ.நி கவலை கொள்கிறது. குழுக்கள் மற்றும் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதற்கு அவசியமான ஏனைய முன்னெடுப்புகள் தற்போதைய சட்டமூலத்துடன் காண்பிக்கப்படுவதற்கு ஆர்வமற்ற ஒரு நிலையில், இச்சட்டமூலத்தை நகர்த்துவதற்கான வெளிப்படை அவசரம் இங்கே முரணாகுதல் வேண்டும்.

இச்சட்டமூலம், நடைமுறைப்படுத்தப்படின், அது தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் பாதுகாப்புக்கு கணிசமான பாதிப்புகளைக் கொண்டிருக்கின்றதுடன் இலங்கையில் கட்டுக்காவலின் போதான சித்திரவதையை மேலும் வலுப்படுத்துவதாகின்றது.